DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.53/2022**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சின்னகுப்புசாமி | Caste: | |
| Father's Name: | கிருஷ்ணமாச்சாரி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.05.2025

( எதிரி ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது பரமக்குடி தாலுகா மஞ்சூர் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவ காலத்தில் மஞ்சக்கொல்லை கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சீர்காழிவட்டம் அகரஇலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சாமித்துரை மகன் சகாதேவன் என்பவரை தெரியும். அவர் இந்து பறையர் சாதியைச் சார்ந்தவர். ஆஜர் எதிரி இந்து வீரகுடிவெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்தவர். சகாதேவனுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். சங்கீதா வயது 17, சரண்யா வயது 10, சக்திவேல் வயது 15. அவர்கள் எதிரியின் காளவாசலில் இருந்தார்கள். அவர்களுடன் சகாதேவன் மற்றும் அவர் மனைவியும் இருந்தார்கள். கடந்த 15.03.2022 பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தபோது அன்று மாலை 5.00 மணிக்கு Child Helpline தொலைபேசி மூலம் தகவல் சொன்னார்கள். தொலைபேசி தகவல் அடிப்படையில் வட்டாட்சியருக்கு தகவல் சொல்லிவிட்டு நானும் கிராம உதவியாளரும்

சம்பவ இடத்திற்கு மாலை 5.00 மணிக்கு சென்றோம். நானும் கிராம உதவியாளரும் Child Helpline குழுவும் சேர்ந்து நாட்டு காளவாசலில் தங்கியிருந்த சகாதேவன் மற்றும் அவரது குடும்பத்தை விசாரணை செய்தோம். விசாரணையில் அந்த மூன்று குழந்தைகளும் குழந்தைத் தொழிலாளர்களாக காளவாசலில் வேலைக்கு பணியமர்த்தப்பட்டது தெரியவந்தது. அதனடிப்படையில் Child Helpline குழுவும் நானும் கிராம உதவியாளரும் இருந்து சத்திரக்குடி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். மேற்படி வன்னிராசு சகாதேவன் குடும்பத்தினர் ஆதிதிராவிடர் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால் சாதியைச் சொல்லி இழிவாக பேசியதாகவும் எங்கள் விசாரணையில் தெரியவந்தது என்ற விவரத்தையும் புகாரில் தெரிவித்துள்ளேன். குழந்தைத் தொழிலாளர்களை வேலை வாங்கியதாகவும் சாதியை சொல்லி இழிவாக பேசியதாகவும் அந்த அடிப்படையில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்பந்தமாக காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- N. Shanthi
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.53/2022**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இராமலெட்சுமணன் | Caste: | |
| Father's Name: | பாண்டி | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 16.05.2025

( எதிரி ஆஜர்.)

**<u>முதன்மை விசாரணை</u>**

நான் தற்போது பரமக்குடி தாலுகா மஞ்சக்கொல்லை குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் சாட்சி சொன்ன அ.சா.1 கிராம நிர்வாக அலுவலராக சம்பவ காலத்தில் பணிபுரிந்தார் அவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியும். சீர்காழிவட்டம் அகரஇலத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சாமித்துரை மகன் சகாதேவன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரி இந்து வீரகுடிவெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்தவர். சகாதேவனுக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர். சங்கீதா வயது 17, சரண்யா வயது 10, சக்திவேல் வயது 15. அவர் இந்து பறையர் சாதியைச் சார்ந்தவர். அவர்கள் எதிரியின் காளவாசலில் இருந்தார்கள். அவர்களுடன் சகாதேவன் மற்றும் அவர் மனைவியும் இருந்தார்கள். கடந்த 25.03.2022 ம் தேதி கிராம நிர்வாக அலுவலருக்கு பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் நாங்கள் இருந்தபோது போன் வந்தது. இராமநாதபுரம் மாவட்டம் Child Helpline மூலம் போன் வந்தது. குழந்தைகளை

கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்குவதாக தகவல் வந்ததாகவும், உடன் வரும்படியும் அழைத்தனர். நானும் அ.சா.1 ம் மஞ்சக்கொல்லையில் உள்ள வன்னிராசுவின் காளவாசலுக்கு சென்றோம். அப்போது Child Welfare Committee Member மூலம் சகாதேவன் குடும்பத்தினரை விசாரித்தனர். அதில் என்னை வந்து வன்னிராசு சாதியைச் சொல்லி தங்களை பேசுவதாக சகாதேவன் சொன்னார். பின் விசாரணையின் அடிப்படையில் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கும்படி கிராம நிர்வாக அலுவலரிடம் மேற்படி கமிட்டி மூலம் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் சத்திரக்குடி காவல்நிலையத்தில் நானும், அ.சா.1 ம் சென்று அ.சா.1 மூலம் புகார் கொடுத்தோம். இதுசம்பந்தமாக காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- N. Shanthi
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)